## அறுவடை செய்த எள்ளை உடனே விற்கவும்

உலகின் எள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்தியாவின் எண்ணெய் பிழிதல் அமைப்பின்படி 2015 -16 ஆம் ஆண்டில் எள் 19.81 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 7.25 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்கு வங்காளம், ஒடிசா, அஸ்ஸாம், ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு எள் விளைவிக்கும் முக்கிய மாநிலங்களாகும். அதிக இருப்பின் காரணமாக தமிழ்நாட்டில் சென்ற வருடத்தை விட இவ்வருடத்தில் எள் குறைந்த பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஈரோடு, கரூர், தஞ்சாவூர், கடலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் எள் உற்பத்தி செய்யப்படுகின்றது.

நாட்டின் மொத்த எள் உற்பத்தியான 7.25 இலட்சம் டன்களிலிருந்து 0.15 இலட்சம் டன்கள் விதைப்பிற்காகவும், 3.0 இலட்சம் டன்கள் ஏற்றுமதிக்கும் மற்றும் மீதம் உள்நாட்டு நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகின்றது. சிவப்பு மற்றும் கருப்பு எள் இரகங்கள் எண்ணெய் தயாரிப்பதற்கும் வெள்ளை எள் இரகங்கள் மிட்டாய் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. அதிக உற்பத்தியோடு உள்நாட்டு இருப்பிற்கான அளவு அதிகரித்ததாலும் இந்தியாவின் ஏற்றுமதி சென்ற வருடத்தை விட 34 சதவிகிதம் குறைந்துள்ளது.

அதிக பரப்பளவு மற்றும் சாதகமான பருவநிலை காரணமாக இந்தியாவில் எள்ளின் உற்பத்தி அதிகமானது. சீனா மற்றும் தெற்கு அமெரிக்காவில் எள் உற்பத்தி அதிகமானதாலும், வட அமெரிக்காவின் தேவை குறைந்துள்ளதாலும் இந்தியாவின் எள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள சிவகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய கருப்பு இரக எள்ளின் விலையை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில், ஊரக

மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான கருப்பு இரக எள்ளின் பண்ணை விலை மே - ஜீன், 2016 ல் கிலோவிற்கு ரூ.81-85 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி எள்ளை உடனே விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி - 0422- 2450812